**அட்டாளைச்சேனை பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | காணிகளின் பெறுமதி நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சபையினால் 2017 ஆண்டு கொல்களம் அமைப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியின் பெறுமதி 2,000,000 கணக்குக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் காணப்படுகின்ற காணிகளின் பெறுமானத்தை மதிப்பீடு செய்து எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு தயாரிக்கப்படும் நிதிக்கூற்றில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ii) சபைக்குச் சொந்தமானதும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுமான 03 மோட்டர் லொறிகள், மோட்டர் சைக்கிள், JCB இயந்திரம், பவுசர் மற்றும் 04 இழுவைப் பெட்டிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற அனைத்து மோட்டார் வாகனங்களும் உரிய காலத்தில் மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதியானது நிலையான சொத்துக்களுக்கு கொண்டு வரப்படவேண்டும். | வாகனங்களின் விலை மதிப்பீடு செய்வதற்காக 2015 ஆண்டு கோரப்பட்ட போது 2017ம் ஆண்டு சில வாகனங்களுக்கு மதிப்பீடு செய்து தரப்பட்டது. இன்னும் சில வாகனங்களுக்கு அனுப்பி வைக்கப்படாததனால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கிடைக்கப் பெற்றதும் நிதிக்கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| (iii) மீளாய்வாண்டு மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகப் பெறப்பட்ட 107 நூலகப்புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் மதிப்பிடப்பட்டு கிரயப் பெறுமதியானது நிலையான சொத்துக்களில் கொண்டு வரப்படவேண்டும். | எதிர்வரும் 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்படும் நிதிக்கூற்றில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (iv) சபையினால் பேணப்படுகின்ற பதிவேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதி வரை பெறவேண்டிய திண்மக்கழிவு சேவை நிலுவைக் கட்டணம் ரூபா 2,877,310 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,569,844 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | நிலுவைக் கட்டணங்கள் நடைமுறைச் சொத்து மற்றும் ஆண்டுக்கான மிகை வருமானங்களினை பாதிப்பதனால் சரியான நிலுவை நிதிக்கூற்றில் காட்டப்பட வேண்டும். | எதிர்வரும் 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்படும் நிதிக்கூற்றில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (v) 2015 முதல் 2017ஆம் ஆண்டு வரையான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 975 நூலகங்களின் புத்தகப் பெறுமதியானது ஏடுகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை. | உரிய காலத்தில் சீராக்கம் செய்யப்பட்டு கிரயப் பெறுமதியானது நிலையான சொத்துக்களில் பதிவழிக்கப்பட வேண்டும். | 2015 ஆம் 2017 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பொருட்கணக்கெடுப்புகளின் போது அழிக்கப்பட்ட 614 புத்தகங்களின் பெறுமதியினை கணிப்பீடு செய்து ஏடுகளில் இருந்து கழித்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகிறேன். |

**(ஆ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,377,155 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்கு உரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள், மீதிகளை உறுதிப்படுத்தல் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர் வரும் காலங்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் சபையில் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட வேண்டிய போதிலும், அக்குழுக்கள் இன்று வரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | தனித்தனி குழுக்கள் அமைத்து அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு குழுக்களை அமைக்க 2019.06.04 ஆம் திகதி சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன் |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுடன் ஒப்பீட்டு அறிக்கை சேர்த்து அனுப்பி வைக்கப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன் |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 260 மற்றும் 389 | 2018 பெப்ரவரி, ஏப்ரல், மற்றும் ஜுன் மாதங்களில் வழங்கப்பட்ட 93 காசோலைகள் காசோலை வழங்கல் பதிவேட்டின் பதிவுகளில் கொடுப்பனவு செய்யப்பட்ட நபரினை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | குறிந்த நபர்களிடமிருந்து உறுதிச் சீட்டில் கையொப்பம் இடப்பட்டு பெறப்படுகின்றன. ஆனால் காசோலையினை அலுவலகத்தில் இருந்து உத்தியோத்தர்கள் கொண்டு ஒப்படைப்பதனாலும் வழங்கல் பதிவேட்டில்கையொப்பம் இடப்படாது காணப்படுகின்றது. மேலும் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ஈ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள், கணினி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | உரிய திறைசேரி சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணினி உதிரிபாகங்கள், கணினி மென் பொருட்கள் என்பன இருப்பு புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. ஆகவே இனிவரும் காலங்களில் இதற்கான பதிவேடு பயன்படுத்தப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகிறேன். |
| (உ) | 41/90 ஆம் இலக்க 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | எரிபொருள் பரிசோதனையானது 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 யூலை 21 ஆந் திகதியின் பின்னர் அவ்வாறு பரிசோதனை செய்யப்பட்டிருக் கவில்லை | உரிய திறைசேரி சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலப்பகுதிகளுக்கு வாகனங்களின் எரிபொபொருள் பரிசோதனை செய்யப்படும் என்பதனைதங்களுக்கு அறியத்தருகிறேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,070,458 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 7,585,750 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 733,000 | 271,375 | 271,375 | -- | 533,000 | 525,135 | 525,135 | - |
| வாடகைகள் | 1,950,000 | 1,902,253 | 1,902,254 | 273,000 | 1,700,400 | 1,940,615 | 1,941,000 | 273,300 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,105,000 | 748,000 | 748,000 | -- | 1,705,000 | 1,070,940 | 1,071,940 | - |
| ஏனைய வருமானம் | 26,562,000 | 27,008,322 | 16,530,970 | 7,258,104 | 21,195,000 | 18,805,064 | 15,382,000 | 6,292,761 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 36,496,011 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 19,452,599 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 53% ஆக காணப்பட்டிருந்தது. | வருமான பரிசோதகர்களிற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | சபைக்கு வருமான பரிசோதகர்கள் 02 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தும் பதவி வெற்றிடம் காணப்படுவதனால் குறித்த வருமானத்தினை பெற முடியாமல் உள்ளது. |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் 2018 டிசம்பர் 31 வரை சபையின் பிரதேச நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்டுள்ள 830 வியாபார நிலையங்களில் மீளாய்வாண்டில் 352 வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணமானது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான பரிசோதகர்கள் நியமனத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருமானம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு வருமான பரிசோதகர்கள் 02 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தும் பதவி வெற்றிடம் காணப்படுவதனால் குறித்த கடைகளுக்கு சென்று வியாபார பத்திர கட்டணம் அறவிட முடியாமல் உள்ளது. மேலும் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் கொடுத்தும் பெற்றுக் கொள்ளாமல் உள்ளனர். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 273,300 ஐந்து ஆண்டுகளாக அறவிடப்படாது | குத்தகை அறவீடு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபர்கள் நாட்டில் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக |

| | | |
|---|---|---|
| நிலுவையாக காணப்படுகின்றது. | | சட்டநடவடிக்கை முடியாமல் உள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,337,938 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 10,959,487 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | குறித்த வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் | நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தண்டப்பணமானது 2018 இல் தங்களுக்கு அனுப்பப்படவில்லை. மேலும் முத்திரைக் கட்டணம் பெறுவதற்காக மாகாண திரைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வைகளை பிரதேச சபையினால் கணக்கிட்டு உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தகவல்களைப் பெற்று குறித்த முத்திரை தீர்வை இனை அறவிட நடவடிக்கை எடுத்தல். | கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் நேரடியாகவும் நடமாடும் சேவை ஊடாகவும் பெறப்படுகின்ற தகவல்கள் தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்பாதனால் கணக்கில் உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றேன். |

**2.2.6 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் Roller மற்றும் JCB வாகங்கள் வேலை செய்தமைக்கான வாடகை வருமானமானது முறையே ரூபா 26,000 மற்றும் ரூபா5,250 தொகையானது 2019 மே 31 வரை அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவைக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்தப்படாததை செலுத்துமாறு உரியவருக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) JCB வாகனத்தின் ஓட்டப்பதிவேடானது முறையாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படாது காணப்படுகின்றது. | வாகனத்தின் ஓட்டப்பதிவேடானது இற்றைப்படுத்தப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) காரைதீவு பிரதேச சபையிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,712,948 திண்மக்கழிவு நில நிரப்பு கட்டண நிலுவையினை 02 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சபையின் மீளாய்வாண்டின் 07 வது கூட்டத்தின் 2018/82 வது தீர்மானத்தின் | உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

பிரகாரம் அக்கட்டணத்தை அறவிடுவதாகவும் இல்லையெனின் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2019 மே 31 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நிலுவையாகவே காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் 2012 ஆம் ஆண்டில் 07 உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் தயாரிக்கப்பட்ட போதிலும், அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் அவற்றிக்கான அனுமதிகள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சபைக்கு பொருத்தமான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் துணைவிதிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த 07 உப விதிகளையும் மாகாண சபைக்கு அனுமதிக்காக உரிய காலப்பகுதியில் அனுப்பப்பட்டிருந்த போதிலும், தற்போது கிழக்குமாகாண சபையினால் 05 உப விதிகள் மாத்திரமே சரி பார்த்து ஆவணமாக தயாரிக்கப்பட்டு 2019.05.23ஆம் திகதிய 2019/219 இலக்க சபைத்தீர்மானத்துடன் மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது கௌரவ ஆளுநரது அனுமதியுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது. |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அனுமதி பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மேற்படி உப விதிகள் கிழக்கு மாகாண சபையின் மூலம் அனுமதிக்கப்பட்ட பின் இனிவரும் காலங்களில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 யூலை 08 ம் திகதிய முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் திண்மகழிவுகளினை வெவ்வேறாக சேகரிப்பதற்காக ரூபா 216,000 க்கு 8,000 பைகள் (Bags) 2017ல் கொள்வனவு செய்யப்பட்டு இதுவரை காலமும் 1,028 பைகள் விநியோகிக்கப்பட்டு 6,972 பைகள் களஞ்சியத்தில் பயனற்று காணப்படுகின்றது. | முறையான ஆய்வினூடாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவை தரம்பிரித்து சேகரிக்கும் நடவடிக்கை பற்றி பொது மக்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தரம்பிரித்து கழிவுகள் சேகரிக்கப்பட்டன. அவ்வாறு தரம்பிரித்து சேகரிக்கப்படும் கழிவுகளை எமது நிலநிரப்புகை நிலையத்தில் எல்லாவற்றையும் மொத்தமாகவே கொட்டப்பட்டு வந்ததால் பொதுமக்களுக்கு இதன் மூலம் ஏற்பட்டு வந்த மேலதிக சுமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு தற்காலிகமாக தரம்பிரித்து சேகரிக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளன. கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டவுடன் கழிவு சேகரிக்கும் பைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இலக்குகளை அடைவதற்கான நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தற்போது அடையாளங்காணப்பட்டு வருகின்றன. இவ்விடயம் நிறைவு பெற்றதும் சபையினூடாக அனுமதிகளைப்பெற்று எதிர்காலத்தில் துரிதமாக இவ் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 26 காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது வரை அடையாப்படுத்தி சபையின் பெயருக்கு உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளாத 26 காணிகளுக்கும் சபையின் பெயருக்கு உரிமத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 1958ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்கான பங்களிப்பானது மாதாந்த மொத்த | சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்காலிக ஊழியர்களுக்கான EPT மற்றும் ETF பங்களிப்புத் தொகைகள் அவர்களது அடிப்படைச் சம்பளத்திற்கே கணிப்பீடு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| வேதனத்தின் மீது கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டுக்கான EPF மற்றும் ETF தொகைப் பங்களிப்பானது அடிப்படை வேதனத்தில் கணிப்பீடு செய்யப்பட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | | எதிர்வரும் மாதம் முதல் முழுச்சம்பளத்திற்குமான EPF, ETF பங்களிப்புத் தொகைகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறிவிட்டு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) 2012 முதல் மீளாய்வாண்டு வரைக்குமான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபைகளின் சிபாரிசின்படி 35 வகையான 238 பொருட்கள் பற்றாக்குறையாக காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை எடுத்து அதன் பின்னர் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின், உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியினை பெற்று அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | இது 2012ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற விடயமாகையாலும், இந்நிகழ்வு இடம்பெறும் போது, அதிகாரத்தில் இருந்த கௌரவ தவிசாளர் மரணித்து விட்டதனாலும், இதனை பதிவழிப்பதற்கான ஏற்பாடுகளை சபையினூடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஈ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற 2 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | குறித்த வாகனத்திற்கான உரிமமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 07 பதவிகளுக்கான 08 வெற்றிட ஆளணிகள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். | ஆளணி தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் பிரதி மாதம் தோறும் கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்படுகிறன. இது தொடர்பான நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் என்பதை தங்களது மேலான கவனத்திற்கு அறியத்தருகிறேன். |
| (ஆ) சபையின் செயலாளர் பதவியானது 2017ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்றது | சபையின் பிரதான வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். | ஆளணி தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் பிரதி மாதம் தோறும் கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்படுகிறன. இது தொடர்பான நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும். |
| (இ) 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு காலப்பகுதியில் நிலுவையாகவுள்ள 07 உத்தியோகத்தர்களின் ரூபா 169,135 கடன் நிலுவைத் தொகைகளை | கடன் நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கான | தற்போது சேவையில் உள்ளவரகளிடம் உரிய திணைக்களங்களில் இருந்து கடன்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154ஆம் பிரிவுக்கமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,500,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது. | சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்காக சபையினுடாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறேன். |
| (ஆ) சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக மேலதிகமாக நிறுவிய விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட முடியாததனால் சபை வருடாந்தம் ரூபா 120,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது. | விளம்பரம் தொடர்பான துணைவிதிகளை விதிப்பதன் மூலம் விளம்பரக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் முழுமையாக இதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 136,044,854 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகள் முறையாக இற்றைப்படுத்தி கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | உரிய பதிவேடுகளில் அசையும், அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 01 உழவு இயந்திரம், 03 தண்ணீர் பவுசர் மற்றும் 01 Single Drum Vibrator போன்றவை பலவருட காலமாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. இவற்றை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கான அல்லது திருத்தி மீளப் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உழவு இயந்திரம் 01, தண்ணீர் பவுசர் 03,Singly Dram Vibrator 01, போன்றவை முற்றாக பழுதடைந்து காணப்படுவதால், இவற்றை கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (Engineer) அவர்களுக்கு அறிவித்து அவர்களது அறிக்கையினைப் பெற்று இவ்வியந்திரங்களை பழுதுபார்க்க அல்லது விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறேன். |

### 3.5.3 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,400,000 நிதியைப் பயன்படுத்தி பள்ளக்காடு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையம் மற்றும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இன்று வரை பாவனையின்றி காணப்படுகின்றது. | திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாட்டினை விரைவுபடுத்தி சபைக்கு வருமான உழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திலுள்ள எலும்பு அரைக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு 3 Phase Line மின்சாரம் தேவைப்பட்டதன் காரணமாக இவ்வியந்திரத்தை இயக்க முடியாமல் இருந்தது. தற்போது இம்மிணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், கூடிய விரைவில் இதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். |

### 3.6 பெறுகை

#### பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**---------------------------------------------------**

**தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்**

**----------------------------------------**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2005 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 170,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பாலமுனை - ஒலுவில் பிரதான வீதியில் பொருத்தப்பட்ட சூரிய மின்சக்தியில் இயங்கும் 02 மின்குமிழ்கள் மற்றும் பொருத்துக்கள் 2015 திசெம்பர் 20 ஆம் திகதி களவாடப்பட்டமை தொடர்பாக 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்கப்பட வேண்டும். | 2005 இல் களஞ்சியப்பதிவேட்டில் 96,392 பெறுமதியான மின்சார இருப்புப் பொருட்கள் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கான எந்த ஆவணங்களும் காணப்படவில்லை மேலும் 2014ம் ஆண்டு காலப்பகுதியில் அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு, பாலமுனை கிராமங்களுக்க இடைப்பட்ட பிரதேசத்தில் சபையின் மூலம் கொள்வனவு செய்து பொறுத்தபட்ட சூரியவழ மின்குமிழ்கள் 02 களவாடபடப்பட்ட விடயமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. |